விதமான பயனுமில்லை. ஸ்டுடியோ வைக்கலாம் என்பது நல்ல உருப்படியான யோசனை. நான் வெகு தீவிரமாக அதைப்பற்றி எண்ணிக் கொண்டிருக்கிறேன். எண்ணிக் கொண்டிருக்கிறேன் என்றால், ஆகஸ்டில் வருமா, செப்டம்பரில் வருமா என்று எண்ணத் தேவையில்லை. இன்னொரு மாநிலத்தில் சினிமா ஸ்டுடியோ ஒன்றை மாநில சர்க்கார் அமைத்திருக்கிறார்கள். அது நடைமுறையில் எப்படி இருக்கிறது என்பதைப் பார்த்து, அதற்குப் பிறகு நாம் அதை எடுத்துக் கொள்ளலாம். ஆனால் அதை ஒத்துக்கொண்ட பிறகு, மறுபடியும் கனம் • உறுப்பினர் அவர்களுடைய எண்ணத்தைத் திருத்த விரும்புகிறேன். நாங்கள் சினிமாத் தொழிலைத் தேசியமயமாக்கவேண்டுமென்று சொல்லவில்லை, சினிமாக் கொட்டகைகளை மட்டும்தான்.

திரு. கே. போஜன் : அவைத் தலைவர் அவர்களே, பூனாவில் சினிமாத் தொழிலை படிப்பதற்காக ஒரு கலைக்கல்லூரி வைத்திருக்கிறார்கள். அதைப் போல் சினிமாத் தொழிலை கற்றுக்கொள்ள நம்முடைய மாகாணத்திலும் ஒரு கல்லூரி நிறுவும் யோசனை நம்முடைய அமைச்சரவைக்கு உண்டா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அதைப்பற்றி தனிப்பட்ட முறையிலே எனக்குக் கருத்து வேற்றுமை உண்டு. நடிப்பு, பள்ளிக்கூடத்தில் வகுப்பு அறையில் சொல்லிக்கொடுக்க கூடியதல்ல. நாடக அமைப்பு மூலம் தான் சினிமாத் தொழிலுக்குத் தேவையான நடிப்பைப் பெறமுடியும். அப்படிப்பட்ட நல்ல நாடகக் கம்பெனிகள் நாளுக்கு நாள் நலிந்து வருகின்றன. நாடகங்களில் நடிப்பதன் மூலம் நல்ல நடிப்புத் தன்மை கிடைப்பதற்கு வழி உண்டு. அது வகுப்பு அறையில் வைத்துச் சொல்லிக் கொடுக்கக் கூடியதல்ல. வகுப்பு அறையில் சொல்லிக்கொடுக்க வேண்டுமென்றால், சிலப்பதிகாரத்தில் அதைப்பற்றி வெகு விரிவாக சொல்லப்பட்டிருக்கிறது. தமிழாசிரியர்களே அதைப்பற்றி சொல்லிக்கொடுத்து விடலாம்.

• 41 Q.—THIRU K. VINAYAKAM: Will the Hon. the Minister for Harijan Welfare and Information be pleased to state:

(*a*) whether there is any proposal to nationalise the cinema theatres and public entertainment houses; and

(*b*) if so, in what stages?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) இப்பொழுது இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

திரு. கே. விநாயகம் : சினிமாத் தொழிலை தேசியமயமாக்க முடியாது என்று முதல் அமைச்சர் அவர்கள் நினைத்தாலும்கூட, சினிமாக் கொட்டகைகள், அதோடு சேர்ந்த டூரிங் சினிமாக்கள் என்று சொல்லப்படுகிறதே அவைகளையெல்லாம் அரசாங்கம்

எப்பொழுது எடுத்துக்கொள்ளும்? அப்படி எடுத்துக்கொள்வதினால் வருகிற விளைவு என்ன, அதிலிருந்து எவ்வளவு வருமானம் அரசாங்கத்திற்குக் கிடைக்கும் என்று முதல் அமைச்சர் அவர்கள் நினைக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அதிலே எவ்வளவு வருமானம் வரும் என்று இன்னமும் நான் கணக்குப் பார்க்கவில்லை. ஆனால், சர்க்கார் அதை எப்பொழுது எடுத்துக்கொள்ளும் என்றால், சர்க்கார் இப்படி எடுத்துக் கொள்ள வேண்டியது நியாயம்தான் என்று மக்களுடைய கருத்து திரண்ட பிறகுதான் எடுத்துக் கொள்ளும்.

திருமதி சு. குப்பம்மாள் : சினிமாவில் ஆபாசமான துணி உடுத்துகிறார்கள். அதை இல்லாமல் செய்ய முடியுமா என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : கனம் உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டதினால், அதைப்பற்றிப் பொதுவான கருத்தைச் சொல்லலாம் என்று கருதுகிறேன். எது ஆபாசம், எது ஆபாசமில்லை என்பது ஒவ்வொருவருடைய மனப்பான்மைக்கும் காலத்திற்கும் பொறுத்ததாக இருக்கிறது. ஆகவே, இன்னது தான் ஆபாசம் என்று குறிப்பிட்டுச் சொல்வதற்கில்லை. ஆனால், கனம் உறுப்பினர்கள் எதையாவது ஆபாசம் என்று கருதுவார்களேயானால், அப்படிப்பட்ட ஆபாசத்தை நீக்குவதற்குத் தங்களுடைய கருத்துக்களைப் படம் எடுப்பவர்களுக்குக்கூட எழுதியனுப்பலாம்.

DR. H. V. HANDE : Is the Minister aware that many of these theatres are kept in a very, very bad condition from the hygienic point of view and what steps does he propose to take to see that they are kept in a hygienic condition?

THE HON. THIRU C. N. ANNADURAI : The Member's suggestion will be looked into.

திரு. வெ. முனுசாமி : தியேட்டர் இருக்கிற இடங்களில் நிபந்தனையின்றி டூரிங் டாக்கீஸ்கள் இயங்குவதற்கு அனுமதி தருவதில்லை என்ற விதி தியேட்டர் முதலாளிகளுக்கு அனுகூலமாக இருப்பதை அரசு அறிகிறதா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : அதைப்பற்றி சர்க்கார் சிந்தனை செய்யவில்லை. கனம் உறுப்பினர் இப்பொழுது சொல்லியிருப்பதால் அதைப்பற்றி யோசிப்பதாக இருக்கிறோம்.

THIRU K. VINAYAKAM : As it has been found that non-smoking in theatres is very good from the hygienic point of view and as the rule is enforced only in the City of Madras, will the Government take steps to introduce this kind of restriction in the mofussal places also?

THE HON. THIRU C. N. ANNADURAI : My hon. Friend has had the experience of mofussal theatres and the prevalence of smoking there. I did not have enough opportunity about that.

But what pertains to the City theatres pertains to the mofussal theatres also. If the rules are not being strictly observed, I will see to it that they are observed.

கதர், கைத்தறித் துறைகள்

*42 வினா.—திரு. கரு. சீமைச்சாமி : மதிப்பிற்குரிய நல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கதர்-கைத்தறி இலாகா இவற்றின் பணிகளை ஒருமுகப் படுத்தி சீராக்குவது பற்றிய செயற்குறிப்பு ஏதேனும் அரசாங்கத்தின் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் என்றால், அதன் விபரம் என்ன ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : (அ) இல்லை.

(இ) கேள்வி எழ இடமில்லை.

DR. H. V. HANDE : Is the Minister aware that in the part few years the quality of Khadi has gone down so much that it warrants some immediate inspection as to what exactly is the reason for the decline in the quality of Khadi?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : கதர்த் துணிகளின் தரம் நாளுக்கு நாள் குறைந்துவருவதாக உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். கதர்த் துணியின் உற்பத்திச் செலவு மிக அதிகமாக ஆவதாலும், அந்தத் துணியை நெய்பவர்கள் ஊடுக்கும், பாவுக்கும் வெவ்வேறு நூலை உபயோகப்படுத்துவதாகப் புகார்கள் வந்திருக்கின்றன. அவைகளைப்பற்றியெல்லாம் அரசு சிந்தித்துப் பார்த்துக் கொண்டிருக்கிறது. அதில் என்னென்ன மாற்றங்கள் செய்ய வேண்டும் என்பதைப்பற்றி விரைவிலே முடிவு எடுக்கும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : தமிழகத்தைப் பொறுத்தவரையிலே, கைத்தறி நெசவாளர்களின் நிலைமை மிகவும் நசித்து வருகிறது. அவர்களுடைய வளர்ச்சிக்கு இந்த அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டிருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : கைத்தறித் துணிக்கும், கதர்த் துணிக்கும் தொடர்பு இல்லை என்பதை உறுப்பினர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

திரு. பெ. மலைச்சாமி : அரசு ஊழியர்களை, குறிப்பாக ஊராட்சி ஒன்றியப்புகளில் பணியாற்றும் ஆசிரியர்களைக் கட்டாயப்படுத்தி கதர்த் துணி விற்கும் முறையை அரசு கைவிடுமா ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : கட்டாயப்படுத்தி விற்பனை செய்யக்கூடாது என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.